# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மே 14, 2022 Weekly E-paper ● May 14, 2022




## இந்திய அரசியலமைப்பின் பிரிவு 351-ஐ நீக்குக!

வெற்றிச்செல்வன்

### எரியும் இலங்கை உணர்த்தும் பாடம்

காசு. நாகராசன்

### உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க உத்தரவு

தலையங்கம்

### மாநில சுயாட்சி

நூல் அறிமுகம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● மே 14, 2022 Weekly E-paper ● May 14, 2022


# இந்திய அரசியலமைப்பின் பிரிவு 351-ஐ நீக்குக!

வெற்றிச்செல்வன்

கடந்த ஏப்ரல் 28, 2022 அன்று புதுச்சேரியில் உள்ள ஜவகர்லால் நேரு முதுகலை மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சிக் கழகம் (JIPMER) இரண்டு சுற்றறிக்கைகளை ஒரே நாளில் வெளியிட்டுள்ளது. இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்படுவதோடு அதில் ஒரு சுற்றறிக்கை அலுவல் மொழிச் சட்டத்தை மீறுவதாகவும் உள்ளது.

ஒரு சுற்றறிக்கை, அலுவல் மொழிச் சட்டம் 1963 பிரிவு 3 (3) ஐ குறிப்பிட்டு அதன்படி பொது ஆணைகள், அறிவிக்கைகள், தீர்மானங்கள், விதிகள் மற்றும் அதற்கான படிவங்கள் உள்ளிட்ட ஆவணங்கள் எல்லாம் இரு மொழிகளில் அதாவது இந்தி மற்றும் ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது.




இரண்டாவது சுற்றறிக்கையின் உள்ளடக்கம் அதிர்ச்சியைத் தருகிறது.

“அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் எல்லா பதிவேடுகள், பணி ஏடுகள், பணிக் கணக்குகள் ஆகியவற்றின் பொருள், விவரங்களின் தலைப்புகள் இந்தியிலும், ஆங்கிலத்திலும் எழுதப்படும். எல்லா பதிவேடுகள், பணி ஏடுகள், பணிக் கணக்குகள் ஆகியவற்றில் எதிர்காலப் பதிவுகள் இனி முடிந்த அளவிற்கு இந்தியில் மட்டுமே செய்யப்படும்”

இந்த உறுதி மொழி ஜிப்மர் இந்திப் பிரிவால், நாடாளுமன்ற அலுவல் மொழிக் குழுவிற்குத் தரப்பட்டுள்ளதாம்.

அது மட்டுமன்று. கோப்புகளில் 30% அளவிற்கு இந்தியில் குறிப்புகள் எழுத இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், இந்திப் பயிற்சி வகுப்புகளில் பயிற்சி பெற்ற பணியாளர்கள் மற்றும் இந்தித் தேர்வுகளில் தேர்ச்சி அடைந்தவர்கள் 50% அளவுக்குக் அவர்களுடைய அன்றாடப் பணிகளில் கட்டாயம் இந்தியைப் பயன்படுத்த வேண்டும் என்றும் இவை இரண்டும் அல்லாத மற்றொரு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது சட்ட மீறல் மட்டுமின்றி இந்தியைத் திணிக்கின்ற அப்பட்டமான நடவடிக்கை ஆகும். சட்டம் இருமொழிப் பயன்பாடு பற்றி பேசும்போது “இந்தியைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டும்” என்று சொல்லும் அதிகாரம் ஜிப்மருக்கு எங்கே இருந்து வருகிறது? என்ற கேள்வி எழுகிறது.

ஜிப்மரின் இச்செயலை நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கண்டித்துள்ளார். இந்தச் சுற்றறிக்கையினை உடனடியாகத் திரும்பப்பெறும் நடவடிக்கையை ஜிப்மர் எடுக்க வேண்டும் என்று அதன் இயக்குநருக்கு எழுத்தாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சு. வெங்கடேசன் கடிதம் எழுதியுள்ளார்.

ஒன்றிய அரசு இதுபோன்ற ஆழம் பார்க்கும் முயற்சிகளில் ஈடுபடுவது புதிது அன்று. இதற்குக் காங்கிரசும் விதிவிலக்கு இல்லை. எனினும் அண்மைக் காலங்களில் இம்முயற்சிகள் அதிகமாகி வருகின்றன. ஒவ்வொரு முறையும் தமிழ்நாட்டிலிருந்தே அதற்கு எதிர்ப்புக் குரல் எழுகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தமிழக அரசின் கொள்கை இருமொழிக் கொள்கைதான். நூறாண்டுகளாக இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துக் கொண்டிருக்கும் மாநிலம், தமிழ்நாடு. ”தமிழுக்குத் துரோகமும், இந்தி பாஷையின் ரகசியமும்” என்று 1926-லேயே இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து கட்டுரை எழுதியவர் தந்தை பெரியார் (குடிஅரசு, 07.03.1926). பொதுமொழியாக நாம் முன்வைப்பதும், பெரியாரின் வழியில் ஆங்கிலத்தையே. “இந்தியாவுக்கு ஒரு பொது பாஷை வேண்டுமானால் அல்லது வியாபாரத்திற்கு ஒரு பொது பாஷை வேண்டுமானால் ஆங்கில பாஷையைத் தெரிந்து எடுத்து அதை எல்லா மக்களிடையிலும் பரப்ப முயற்சிக்க வேண்டுமேயல்லாமல் வேறு பாஷையைப் பற்றி யோசிப்பது முட்டாள்தனமோ அல்லது சூழ்ச்சியோதான் ஆகும்” (குடிஅரசு, 20.01.1929).

எனினும் ஒன்றிய அரசின் நிறுவனங்களில் இவ்வாறு தொடர்ந்து இந்தி திணிக்கப்படுவதும், எதிர்ப்புக் கிளம்பிய பின்னர் ஒன்றிய அரசு சிறிது காலத்திற்கு அம்முயற்சியைத் தள்ளிப் போடுவதும் வாடிக்கையாகி விட்டது. சரி! இதற்கு நிரந்தரத் தீர்வுதான் என்ன ?

இவ்விதமான இந்தியைப் புகுத்தும்போதெல்லாம் இந்தி ஆதரவாளர்கள் சுட்டிக் காட்டும் அரசியலமைப்புப் பிரிவு 351 ஆகும். அப்பிரிவு என்ன சொல்கிறது ?

Article 351: It shall be the duty of the Union to promote the spread of the Hindi language.

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

# எரியும் இலங்கை உணர்த்தும் பாடம்

**காசு. நாகராசன்**



இலங்கைத் தீவில் இப்போது தெற்கு பற்றி எரிகிறது. 10 ஆண்டுகளுக்கு முன்பு (2009) வரை தெற்கிலிருந்து வடக்கைப் பற்ற வைத்து எரித்து மகிழ்ந்தார்கள். வடக்கு எரிக்கப்பட்டபோது கொண்டாடியவர்கள்தான், இப்போது எரித்தவனை எரிப்பதற்கு முயன்று கொண்டிருக்கிறார்கள்.

காலம் கொடுத்த தண்டனை கடவுள் வழங்கிய தண்டனை என்று பலரும் அதைப் பற்றி சிலாகித்துப் பேசுகிறார்கள். ராஜபக்சேவின் குடும்ப அரசியல் முடிவுக்கு வருவதாக வரிக்கு வரி சுட்டிக்காட்டி மகிழ்கின்றன பார்ப்பன ஏடுகள். உண்மையில் ராஜபக்சே வீழ்ந்ததில் இந்தியப் பார்ப்பனர்களுக்குத்தான் அச்சமும், கவலையும் மிகுந்துள்ளது. தங்கள் அச்சத்தை மறைக்கவும் கவலையை மடைமாற்றவுமே 'ராஜபக்சே குடும்பம்' என்கிற சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் ராஜபக்சேக்களின் வரிசைக்குத் தகுதியானவர் யார் என்பதை இந்திய இளைஞர்கள் நன்றாகத் தெரிந்து வைத்துள்ளனர்.

1956 இல் தொடங்கிய 'ஒன்லி சிங்களா' சட்டத்தைத் தமிழர்கள் எதிர்க்கத் தொடங்கியது முதல் 2009 இல் இதே மே மாதத்தில் சர்வதேச சட்ட விதிகள், போர் நெறிமுறைகள் அனைத்தையும் காலில் போட்டு மிதித்தபடி இதே ராஜபக்சே முள்ளிவாய்க்காலை மொத்தமாய் எரித்து எக்காளமிட்டுச் சிரித்தது வரை அரைநூற்றாண்டு காலம் இனவெறியை மட்டுமே முழு முதல் முதலீடாகக் கருதி செயல்பட்டன சிங்கள அரசும், சிங்கள ஆட்சியாளர்களும்!

மக்களின் கல்வி, தொழில், வேலைவாய்ப்பு, மருத்துவம், போக்குவரத்து போன்ற எந்தவொரு வளர்ச்சித் திட்டம் குறித்து திட்டமிடலோ தொலைநோக்குப் பார்வையோ ஏதுமின்றி, தேசபக்தி, மதவெறி, இனப்பகை, போர் என்கிற போலியான வெற்றிகளைக் காட்டித் தங்களைச் சவ்கிதார்களாகக் காட்டி மக்களை ஏமாற்றி, சுகபோக வாழ்வில் திளைப்பதே சிங்கள ஆட்சியாளர்களின் குறிக்கோளாக இருந்து வந்தது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக உலகளாவிய பொது முடக்கம் ஆகப் பெரிய நாடுகளின் பொருளாதார சூழ்நிலைகளையே ஆட்டங்காணச் செய்துவிட்ட நிலையில் முழுக்க முழுக்க சுற்றுலா, மீன்பிடித் தொழில், அந்நிய முதலீடுகள் ஆகியவற்றை மட்டுமே நம்பியிருந்த இலங்கை போன்ற நாடுகள் தப்பிவிடுமா என்ன?

ஏற்கனவே முடமாகிக் கிடப்பவனைப் படுக்கைப்புண் பற்றிக் கொண்ட கதையாக இலங்கை கடும் பொருளாதாரப் பின்னடைவையும், வேலையின்மையையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்கு ஆளானது.

பெட்ரோல்,டீசல், சமையல் எரிவாயு விலைகள் விண்ணை முட்ட உயர்ந்தன. இது விலைவாசியை உயர்த்தியது. பெரிய மின் உற்பத்தித் திட்டங்கள் இல்லாத நிலையில் மின்சாரத் தடையும் கைகோர்க்க தொழில்கள் முடங்கின. வேலையின்மை காரணமாக வறுமையில் தள்ளப்பட்ட மக்கள் ஒரு ரொட்டித் துண்டுக்காகச் சக மனிதனோடு போட்டி போடுகிற அளவிற்கு இயல்பு வாழ்க்கை சீரழிவடைந்தது.

அந்நியச் செலாவணி பற்றாக்குறை, பணமதிப்புக் குறைவு, கடன் சுமை, மக்களின் போராட்டம் என அரசு நிர்வாகம் அடியோடு சீர்குலைந்தது. கட்டுப்பாடற்ற நிலைமையில் நாட்டின் சட்டம் ஒழுங்கும் கைமீறியது. தலைக்குமேல் போனபின் சாண் என்ன? முழம் என்ன? என்கிற நிலையில் மக்கள் தெருவிலே இறங்கி வன்முறையைக் கையிலெடுத்துக் கொண்டனர்.

விளைவு, பிரதமர் ராஜபக்சே உயிர்ப்பிச்சை கேட்டு தமிழீழ மண்ணில் (திரிகோணமலை) தஞ்சம் புகுந்துள்ளார். அதேநேரம் அதிபராக இருக்கிற கோத்தபயராஜபக்சேவையும் பதவிவிலகக் கோரி மக்கள் தொடர்ந்து தெருவிலே நிற்கிறார்கள்.

சாதி, இன, மதவெறிச் சர்வாதிகாரம் ஒரு நாட்டை வறுமையின் பிடியிலும் வன்முறையின் மடியிலும் கிடத்தியிருக்கிறது என்கிற உண்மையைப் பேசுவது இந்தியாவில் சிலருக்குக் கிலியை உண்டாக்குகிறது. யார் மறுத்தாலும் யார் மறைத்தாலும் மக்கள் கிளர்ந்தெழுகிறத் தன்னெழுச்சியான போராட்டங்களுக்கு முன்பு ஹிட்லர்களும், இடிஅமீன்களும், ராஜபக்சேக்களும் மட்டுமல்ல போலிச் சவ்கிதார்கள் யாருமே தப்ப முடியாது என்பதுதான் எரியும் இலங்கை உணர்த்தும் பாடம்!

## முன்பக்க தொடர்ச்சி ...

அதாவது இந்தி மொழியைப் பரப்புவது ஒன்றிய அரசின் கடமையாகும் என்கிறது இப்பிரிவு. எனவே, அரசியலமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டதைத்தானே ஒன்றிய அரசு செய்கிறது, இதில் என்ன தவறு உள்ளது என்கின்றனர் இந்தி ஆதரவாளர்கள்.

ஆனால் இந்த ஒரு உறுப்பைக் காரணமாக வைத்துக் கொண்டே இந்தியானது பல்வேறு இடங்களிலும், பல்வேறு தளங்களிலும் நம் மீது திணிக்கப்படுகிறது என்பதுதான் இன்றைய சூழ்நிலை.

இந்திய மொழிகளில் ஒன்றான இந்திக்கு, வேறு எந்த இந்திய மொழிக்கும் தரப்படாத முக்கியத்துவம் ஏன் தரப்பட்டுள்ளது ? இது மொழிச் சமத்துவத்திற்கு எதிரானது இல்லையா ?

இப்பிரிவு இந்திக்கு மட்டும் ஒரு சிறப்பான இடத்தையும் மற்ற இந்திய மொழிகளை இரண்டாம் தரமாகக் கருதப்படுவதற்கும் முக்கிய காரணமாக அமைகிறது இல்லையா?

எனவே இப்பிரிவு இந்தி ஆதிக்கத்தை நம் மீது திணிப்பதாலும், மொழிச் சமத்துவத்திற்கு எதிரானது என்பதாலும் மாநில சுயாட்சிக்கான நமது முழக்கங்களில் முக்கியமான ஒரு முழக்கமாக "பிரிவு 351 நீக்கப்பட வேண்டும்" என்பதும் இருக்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தக் கடமைப்பட்டுள்ளோம். •



சென்னை அம்பத்தூரில் 08-05-2022 அன்று, நரேஷ்குமார் - ரஷீதா ஆகியோரது ஜாதி, மதம், சடங்கு மறுப்புத் திராவிடர் திருமணம் பேரவைப் பொதுச்செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மணமக்கள் பொதுச் செயலாளருக்கு நன்றியைத் தெரிவித்தனர். மணமக்கள் வீட்டார் பேரவை வளர்ச்சி நிதியாக ரூபாய் 10,000/- பத்தாயிரம் வழங்கினார்கள்.

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி !

# கருஞ்சட்டைத் தமிழர்

## உச்ச நீதிமன்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க உத்தரவு !




இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 124 (A) இன் கீழ், 124 ஆண்டுகள் பழைமையான தேசத்துரோகச் சட்டத்தை ஒன்றிய அரசு மறுபரிசீலனை செய்யும் வரை இடைக்காலமாக நிறுத்தி வைக்க வேண்டும் என்று வரலாற்றுச் சிறப்புமிக்க உத்தரவை உச்ச நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

காலனி ஆட்சியில் பிரிட்டிஷ்காரர்களால் உருவாக்கப்பட்ட இந்தத் தேசத்துரோகச் சட்டப்பிரிவை மறுபரிசீலனை செய்ய ஒன்றிய அரசுக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

மேலும், தேசத் துரோகச் சட்டப்பிரிவை மறுபரிசீலனை செய்யும்வரை எந்த ஒரு வழக்கும் பதிவு செய்யக்கூடாது, விசாரிக்கவும் கூடாது என்றும் ஒன்றிய, மாநில அரசுகளுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

NCRB அறிக்கையின்படி 2015 - 2020 காலகட்டத்தில், 356 தேசத்துரோக வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 548 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் 6 பேர் மீது மட்டுமே குற்றம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

அரசுக்கு எதிராகக் குரல் கொடுப்போரை எல்லாம் இந்தக் கொடிய சட்டத்தின் மூலம் கடுமையான இன்னல்களுக்கு ஆளாக்கி, கருத்துரிமையைக் கடந்த 7 ஆண்டுகளில் பாஜக அரசு பெரிய அளவில் ஒடுக்கி வருகிறது.

மிக அதிகமாகத் தவறாகப் பயன்படுத்தப்பட்ட சட்டப்பிரிவு இச் சட்டப்பிரிவுதான் என்று கூறப்படுகிறது.

இன்று உச்சநீதிமன்றமே ஒன்றிய அரசுக்கு இந்தச் சட்டத்தைப் பரிசீலனை செய்ய உத்தரவு பிறப்பித்திருப்பது கருத்துரிமைக்குக் குரல் கொடுக்கும் அனைவரும் வரவேற்க வேண்டிய உத்தரவாகும்.



08-05-202 அன்று ஈரோட்டில் "இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம்" சார்பில் கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் மூன்று நூல்கள் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது.

ஈரோடு நகரத் தந்தை நாகரத்தினம் சுப்பிரமணியம் தலைமையில், மாவட்டச் செயலாளர் ஆ.தமிழ்க்குமரன் வரவேற்புரை ஆற்றினார். தி.மு.க சுற்றுச் சூழல் அணிச் செயலாளர் கார்த்திகேய சிவசேனாதிபதி, பேரவையின் துணைப் பொதுச் செயலாளர் சிற்பி செல்வராஜ், கொள்கைப் பரப்புச் செயலாளர் இரா. உமா ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.



03-05-2022 அன்று கோவையில் நடைபெற்ற கலந்துரையாடல் கூட்டத்திற்குத் தெற்கு மாவட்டத் தலைவர் ஆனைமலை நவநீதன் தலைமை தாங்கினார். மாவட்டச்செயலாளர் ஆடிட்டர் கார்த்தி முன்னிலை வகித்தார்.

ஆசிரியர்:
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில்.இளங்கோவன்**

ஆசிரியர் குழு:
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**
**சாரதா தேவி**

வெளியீடு:
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee


தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

# மாநில சுயாட்சி

நூல் அறிமுகம்

**நாவலர் இரா.நெடுஞ்செழியன்,** நூலின் அணிந்துரையின் ஒரு பகுதி




திமு. கழகம் கோருகிற மாநில சுயாட்சியைவிட மிக அதிகமான உரிமைகளையும், அதிகாரங்களையும் கொண்ட மாநில சுயாட்சி முறையை ஏற்றுக்கொண்டுள்ள அமெரிக்காவும், இரஷ்யாவும் எவ்வளவு வளம் உடையனவாக, வளர்ச்சி கொண்டனவாக, வலிவு படைத்தனவாக விளங்குகின்றன என்று இந்நூலில் ஆங்காங்கு சுட்டிக்காட்டப்பட்டிருப்பது பல கருத்துக் குருடர்களுக்குக் கண்ணொளி பயக்கும் என்று உறுதியாகக் கூறலாம்.

தி.மு.கழகத்தின் கருத்தைச் சுருங்கக் கூறவேண்டுமாயின் இந்திய மண்ணைக் காப்பாற்ற - அதாவது இந்தியாவின் எல்லை, சுதந்திரம், உரிமை, வளம், வாழ்வு ஆகியவற்றைக் காப்பாற்ற என்ன என்ன அதிகாரங்கள், உரிமைகள் தேவைப்படுமோ அவை மத்திய கூட்டாட்சி அரசினிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்; மாநில மக்களைக் காப்பாற்றவும், வாழவைக்கவும், வளர வைக்கவும் என்ன என்ன அதிகாரங்கள், உரிமைகள் தேவைப்படுமோ அவை மாநில சுயாட்சி அரசினிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். இன்னும் சுருங்கக் கூறினால் 'இந்தியாவைக் காப்பாற்றுவது மத்திய அரசின் கடன், மக்களை வாழவைப்பது அந்தந்த மாநில அரசுகளின் கடன்.' இதற்கு ஏற்றபடி அரசியல் அமைப்புச் சட்டத்தை மாற்றி அமைக்க வேண்டியது இன்றியமையாததாகிறது. அதற்கான வழிவகை கூறும் சிறந்த நூல்தான் இந்நூல்.



நண்பர் மாறன் இனிய எளிய தமிழில் ஆற்றொழுக்கு நடையில் இந்நூலை இயற்றி இருக்கிறார் என்பது மட்டுமல்லாமல் உணர்ச்சியை ஆங்காங்கு கொப்பளிக்கவிட்டிருக்கிறார். இந்த நூலைப் படிப்பவர்கள் எல்லாம் தெளிவு பெற்று, உரிமைப் போருக்குத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வார்கள் என்பது திண்ணம்.

மாநில சுயாட்சி அறப்போருக்குப் புறப்படும் அறப்போர் வீரர்கள் அனைவரும் சளைக்காத அளவுக்குக் கையில் ஏற்கத் தக்க கருத்துக் கேடயங்களையும், ஆதார ஈட்டிகளையும் மிக வலிவாக வடித்துத் தந்துள்ள நண்பர் முரசொலி மாறன் அவர்களை நான் மனதார - வாயார வரவேற்றுப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

காலைப் படிப்பவர்கள் எல்லாம் தெளிவு பெற்று, உணர்வு பெ எழுச்சி பெற்று, உரிமை

மாநில சுயாட்சி அறப்போரில் ஈடுபடுத்திக்கொள்ளும் ஒவ்வொரு வீரனுடைய கையிலும் இந்த நூல் ஏந்தும் கேடயமாகவும், எறியும் ஈட்டியாகவும் திகழ்வதாக.

> “ நண்பர் மாறன் இனிய எளிய தமிழில் ஆற்றொழுக்கு நடையில் இந்நூலை இயற்றி இருக்கிறார் என்பது மட்டுமல்லாமல் உணர்ச்சியை ஆங்காங்கு கொப்பளிக்கவிட்டிருக்கிறார். இந்த நூலைப் படிப்பவர்கள் எல்லாம் தெளிவு பெற்று, உரிமைப் போருக்குத் தம்மை ஆயத்தப்படுத்திக் கொள்வார்கள் என்பது திண்ணம். ”

**மாநில சுயாட்சி**

ஆசிரியா : முரசொலி மாறன்.

1974 இல் தி.மு.க முதல் வெளியிடு.

2022 நான்காம் பதிப்பு, சூரியன் பதிப்பகம்

தொலைபேசி: 044 - 42209191

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian